Indian Vedic School
Language of the Gods

# FAMOUS MORAL STORIES

BY INDIAN VEDIC SCHOOL

TAMIL VOL - 8


















# INDEX


| | |
|---|---|
| ENLIGHTENMENT | 1-6 |
| WITTY COMEDIAN | 7-14 |
| FOOLISHNESS | 15-22 |
| FOOT FERTILIZER | 23-31 |
| FORTUNE | 32-40 |
| FRUITS OF LABOUR | 41-49 |


ஞானம்


ஹாம்ப்ஷயர் நாட்டில் வாழ்ந்த எட்வார்ட் ஒரு பணக்காரன்.
ஒரு நாள் ஒரு பாதிரி அவனைப்பற்றி கேள்விப்பட்டு அவனை சந்திக்க வந்தார்.
எட்வார்ட், உனக்கு பல வீடுகள் இருப்பதையும் நீ பணக்காரன் என்பதையும் நான் அறிவேன்.
ஆமாம் ஐயா
ஒரு வீட்டையாவது அனாதைகளுக்கு தானமாக கொடு.
என்ன? நீங்கள் என்ன சொல்கிறீர்கள் ?
வருந்துகிறேன், நான் ஒரு வீட்டை தானம் செய்ய முடியாது. என் தகப்பனார் நூறு வீடுகளை வைத்திருந்தார். எனக்கு ஒரு ஆயிரம் வீடுகளாவது வேண்டும். அது தான் என் வாழ்க்கையின் குறிக்கோள்.


நான் மற்றவரை விட பணமுள்ளவனாக வேண்டும். இப்படி தானம் கொடுத்தால் நான் செல்வந்தனாக முடியாது. மன்னிக்கணும், நான் உதவ முடியாது.
அதே நேரத்தில் ஒரு பிச்சைக்காரன் வந்து எட்வார்ட் இடம் பிச்சை கேட்கிறான்.
ஐயா, நான் இரண்டு நாளாக ஒன்றும் சாப்பிடவில்லை, தயவு செய்து எதாவது சாப்பிட கொடுங்கள்.
பாதிரி அமைதியாக கவனித்து வந்தார்.
சரி, உனக்கு சாப்பாடு தருகிறேன். உன்னிடம் எதாவது பாத்திரம் இருக்கா.
ஆமாம், என்னிடம் ஒன்று இருக்கிறது.
பிச்சைக்காரன், ஒரு தாமிர பாத்திரத்தை நீட்டுகிறான்.
ஓய் முட்டாளே, உன்னிடம் தாமிரப் பாத்திரம் இருக்கும் பொழுது, ஏன் அதை விற்று, சாப்பிட யோசிக்கவில்லை?


பாதிரியாரும், பிச்சைக்காரனும் திடுக்கிட்டனர். பிச்சைக்காரன் போய் விட்டான்.
சில நாள் கழித்து, எட்வர்டின் தந்தை நோய்வாய் பட்டு மரணப்படுக்கையில். எட்வார்ட் அவர் வீட்டிற்கு சென்றான்.
எட்வார்ட் என்னிடம் ஒரு விலை மதிப்பில்லாத ஒரு பொருள் இருக்கிறது. யார் அதை பாதுகாப்பீர்கள், உன் தந்தையா அல்லது நீயா ?
வேண்டாம் ஐயா, என் தந்தைக்கு கொடுக்க வேண்டாம். அவர் சாகப்போகிறார். எனக்கு கொடுங்கள். நான் பாதுகாத்து, நீங்கள் கேட்கும் பொழுது, கொடுக்கிறேன்.


நான் தெரிந்துகொள்ள ஆர்வப்பட்டேன். விலை உயர்ந்த ஏதோ இவரிடம் உள்ளது, அதை அடைய நான் அவரை ஈர்க்க வேண்டும்.
எட்வார்ட் இதோ இந்த ஊசியை வைத்துக்கொண்டு, எனக்கு சொர்க்கத்தில் இதை கொடு. உனக்கு தேவை இல்லை என்றால், உன் தந்தைக்கு கொடு, அவர் திருப்பி எனக்கு கொடுப்பார் என எனக்கு நம்பிக்கை இருக்கிறது.
எட்வார்டுக்கு அதிர்ச்சியாக இருந்தது, பாதிரியார் சொன்னது அவனுக்கு விளங்க வில்லை.
இறந்த பின் யாரும் எதையும் எப்படி எடுத்து செல்ல முடியும்
எட்வார்ட், உன் தந்தை நூறு வீடுகளுக்கு சொந்தக்காரர். ஆனால் அவர் அதை உடன் எடுத்துச்செல்ல முடியாது. ஆயிரம் வீடுகளுக்கு சொந்தக்காரனானாலும், நீயும் எதையும் எடுத்து போகப்போவதில்லை, சரியா ?


நீ ஒரே ஒரு ஊசியை சொர்க்கத்திற்கு கொண்டு செல்ல இயலாது, பிறகு, அங்கே உன் செல்வத்தை அனுபவிக்க எப்படி கொண்டுபோவாய். நீ இறந்ததும், உலக பொருள்கள் எதையும் அனுபவிக்க முடியாது.
ஓஹ், பாதிரியாரே,வாழ்க்கையின் அர்த்தம் எனக்கு தெரிந்து விட்டது. ரொம்ப நன்றி. நாம் நினைக்கும் முறை, நல்லது கெட்டதை முடிவு செய்கிறது.
இறந்த பின் என்னுடன் ஒன்றையும் கொண்டு செல்ல இயலாது என்பதை புரிந்துகொண்டேன். நான் மற்றவர்களுக்கு என்னால் முடிந்த அளவு உதவ ஆசைப்படுகிறேன்.
ஐயா, முதலில் அனாதைகளுக்கு ஒரு வீடு தானம் கொடுக்க விரும்புகிறேன். என் வேண்டுகோளை ஏற்றுக்கொள்கிறீர்களா ?
ஆமாம் எட்வார்ட், நீ உன்னுடைய கருத்தை மாற்றிக்கொண்டதற்கு மகிழ்ச்சி. உன் நற்செயல்கள் உன்னை சொர்க்கத்திற்கு கொண்டு செல்லும். ஆண்டவன் உன்னை ஆசீர்வதிக்கட்டும்.
முற்றும்.


நகைச்சுவையாளன்


அரசன் விக்ரம் கவிதைகளிலும், பல மொழிகளிலும் ஆர்வம் கொண்டு, ஆதரித்து வந்தான்.
அரசன் விக்ரம் உடைய சபையில் பல மொழிகள் பேசும் அறிஞர் இருந்தனர்.
ஒரு நாள்...
மன்னா, நான் பல மொழிகளில் வல்லவன். எல்லா மொழிகளிலும் நான் கவிதைகள் எழுதுவேன்.
நான் எல்லா மொழிகளையும் எந்த உருவத்திலும் படிப்பேன்


நான் உங்கள் சபையிலிருக்கும் அத்தனை அறிஞர் களையும் தோற்கடிக்க முடியும் என்ற நம்பிக்கை எனக்கு உண்டு.
அவர்கள் தோற்றால் தங்கள் சம்பளத்தை எனக்கு கொடுக்க வேண்டும்.
அவர்களை பணி நீக்கமும் செய்ய வேண்டும்.
நான் இவனை சோதிக்க வெண்டும். இவன் தலைக்கனம் உள்ளவனாக இருக்கிறான்.யாராவது ஒரு அறிஞர் இவனை தோற்கடிப்பார் என நம்புகிறேன்.


சரி, நாளை போட்டி வைத்துக்கொள்வோம்.
கோவின்த் உடன் சமஸ்கிருத அறிஞர்கள் விவாதிக்கின்றனர். சமஸ்கிருத அறிஞர் கோவிந்த் ஒப்புக்கொள்கிறார்.
கோவிந்த் இன்னொரு அறிஞரை தோற்கடிக்கிறான்.
கோவிந்த் அடுத்து ஆங்கில, சீன, ஜப்பானிய, ஹிந்தி அறிஞர்களையும் தோற்கடிக்கிறான்.


நான் உண்மையில், இவன் அறிவைப்பற்றி ஆச்சரியப்படுகிறேன்.
அதே நேரத்தில், என் சபையிலிருந்து யாரும் இவனை தோற்கடிக்க முடியாததால், ஏமாற்றம் அடைந்தேன்.
மன்னா, உங்கள் சபையில் அனைவரையும் நான் தோற்கடித்து விட்டேன், என் விருப்பத்தை பூர்த்தி செய்யுங்கள்.
கபில் என்றவன் சபையில் நகைச்சுவையாளனும் கேளிக்கையாளனும் ஆவான்.
மன்னா, கோவிந்துடன் மோத எனக்கு அனுமதி தாருங்கள்.


நீ நிச்சயமாக கோவிந்துடன் போட்டி போடுகிறாயா கபில்?
மன்னா நீங்கள் அனுமதித்தால் இப்பொழுதே கோவிந்தை தோற்கடிக்கிறேன்.
ஆனால் ஒரு நிபந்தனை. கோவிந்த் தோற்றால் எல்லா அறிஞர்களுக்கும் அவரவர் வேலைகளையும் சம்பளத்தையும் திருப்பித் தரவேண்டும்.
நான் தயார், மன்னா.
தயவு செய்து இந்த சுருளை படியுங்கள், எந்த மொழியில் உள்ளது என்பதையும் சொல்லுங்கள்.


அப்படிப்பட்ட மொழி இல்லை, உங்கள் விதூஷகன் என்னை நையாண்டி செய்கிறான்.
ஐயா, நீங்கள் பல மொழி கற்று அறிந்த ஒரு அறிஞர். இந்த மாதிரி மொழி இல்லை என்று சொல்வது, ஆச்சரியமாக உள்ளது.
இப்பொழுதான் நீங்கள் இந்த மொழி தெரிந்த அறிஞரை தோற்கடித்தீர்கள், இது சீன மொழி.
சாத்தியமற்றது, எந்த வகையிலும் இது சீன மொழி இல்லை.
ஐயா, அவசர முடிவுக்கு வராதீர்கள், இதை கண்ணாடியில் பார்த்து படித்து, உண்மையை ஒப்புக்கொள்ளுங்கள்.


ஒஹ், என்.....
நான் ஒப்புக்கொள்கிறேன்.
இது சீன மொழி தான்.
இந்த மாதிரி எழுதி என்னை
குழப்பிவிட்டீர்கள். என்னுடைய
உண்மையான சக்தியை
புரிந்துகொள்ளச்செய்தீர்கள்.
சபாஷ், கபில், நான் என்
தோல்வியை ஒப்புக்கொள்கிறேன்.
வாழ்த்துக்கள் கபில்.
மன்னா, சந்தேகமின்றி கோவிந்த் ஒரு பரிய அறிஞன்.
ஆனால், தலைக்கனம், கர்வமுள்ளவன். அவனுக்கு
அவன் தவறை பெரிய வைக்கவே இப்படி
செய்தேன். இந்த மாதிரி அறிஞரை நாம் இழக்கக்கூடாது.
நான் கவரப்பட்டேன், நீ அறிவாளி மட்டுமல்ல,
நல்ல உள்ளம் படைத்தவனும் கூட.
இன்றிலிருந்து கோவிந்த் என் அறிஞர்
சபையில் சேர்ந்து ஆலோசனைகள் வழங்குவார்.
முற்றும்.


அறியாமை


அபைத் என்பவன் டான் இராஜ்ஜியத்தின் ஆட்சியாளன். இவன் அடம் பிடித்தவன், மிகுந்த தலைக்கனம் கொண்டவன்.
அவனுடைய அறியாமையால் மக்களுக்கு அதிக கஷ்டத்தை கொடுத்தான்.
ஒரு நாள் அபைத்தும், அவனுடைய மந்திரி போலோவும் ஆற்றுக்கரையில் சவாரி செய்துக்கொண்டிருந்தனர்.
போலோ இந்த ஆறு எங்கே போகிறது?
மன்னா, கிழக்கே இருக்கும் கோம இராஜ்ஜியத்தின் பக்கம் போகிறது.
அப்படியா, கோம மக்கள் நமது நீரை அனுபவிக்கிறார்களா?


ஆனால் ... மன்னா ...
நிறுத்து, உன் "ஆனால்" களை கேட்க விரும்பவில்லை. நம் நாட்டிலிருந்து பாயும் ஆற்றின் நீரை உபயோகிப்பதால், நாம் கோம மக்களிடமிருந்து நீர் வரியை வசூலிக்க வேண்டும்.
போலோ அதிர்ந்து போனான்.
ஆனால், மாண்புமிகு மன்னா, அது சரியல்ல, நீர் ஒரு இயற்கையின் கொடை.
அப்படியும் இந்த ஆறு நம் இராஜ்ஜியத்தில் தொடங்கவில்லை. நமக்கு மேலே உள்ள நாட்டிலிருந்து தான் வருகிறது.
நம் ராஜ்ஜியத்திற்கு வரும் ஒவ்வொரு குடிமகனும் வரி கொடுக்கிறான். அதே மாதிரி, நீர் கூட இங்கிருந்து போகிறது.
நீர் மேல் நாட்டிலிருந்து வருவதானால், அவர்கள் நம்மிடம் வரி வாங்காமல் இருப்பது அவர்களுடைய முட்டாள் தனம்.


நான் ஒரு முட்டாள் இல்லை, கோம மக்களிடமிருந்து நீர் உபயோகத்தின் வரி வாங்குவோம்.
மந்திரி கவலைக்கொண்டார்.
ஆனால், தயவு செய்து, நான் சொன்னதையும் யோசித்து பாருங்கள். இந்த முடிவு, கோம நாட்டுடன் விரோதத்தை உண்டாக்கும், அது நமக்கு நல்லதல்ல.
போலோ, நான் உன் 'ஆனால்' களை கேட்க மாட்டேன். ஒரு அணையைக்கட்டி, நீரோட்டத்தை கட்டுபடுத்து, அவர்கள் வரி கொடுக்க ஒத்துக்கொள்ளும் வரை.
அபைத் தானே முன்னின்று அணை கட்டுவதை கவனிக்க வேண்டியதாயிற்று.


ஒரு வருடத்தில் அணை கட்டி முடிந்தது.
சீக்கிரமே ஆற்றை சுற்றியிருந்த தாழ்ந்த பகுதிகளில் வெள்ளம் பெருகியது.
சாபமிடுங்கள் அந்த முட்டாள் அரசனுக்கும், அவன் கொள்கைக்கும்.
மன்னா, எங்கள் நிலங்களெல்லாம் அணையினால் நீருக்குள் மூழ்கி விட்டன. தயவுசெய்து கொஞ்சமாவது நீரை விட்டு விடுங்கள்.
நான் ஒரு சொட்டு நீரும் விடமாடேன், அவர்கள் வரி கொடுக்கும் வரை. என் இராஜ்ஜியம் நீரில் மூழ்கினாலும், எனக்கு கவலை இல்லை.


அரசனின் அடம்பிடிப்பால் ஏமாற்றம் அடைந்த மந்திரி, யோசிக்கிறான்.
இப்படியே விட்டால், மக்கள் கொந்தளிப்பார்கள், கோம நாட்டினர் படையெடுத்து நம்மை எதிர்ப்பர்.
ஒரு யோசனை வந்து, அரண்மனையில் மணி அடிப்பவனை அழைத்தார்.
ப்ஷ்ஷ்ஷ்ஷ் த்., நீ புரிந்து கொண்டாயா ?
ஆமாம் ஐயா.
பழங்காலத்தில், ஒவ்வொரு மணிக்கும் நேரம் அறிந்து கொள்ள மணி அடிப்பார்கள்.
அடுத்த நாள், மன்னன் எழுந்து சூரியன் உதிக்காததை கண்டு ஆச்சரியப்பட்டான்.
என்ன நடக்கிறது ? சூரியன் இந்நேரம் வந்திருக்க வேண்டுமே.
அபைத் போலோ வை அழைத்து, இந்த அதிசயத்தை தீர்க்க சொன்னான்.
காலை வணக்கம், மன்னா.
இன்று சூரிய கிரகணமும் இல்லை, பின் ஏன் சூரியன் உதிக்க வில்லை.


சோம நாட்டினருக்கு நாம் நீரை நிறுத்தினோம், நம் இராஜ்ஜியத்திலிருந்து போகும் நீருக்கு வரி கேட்டு.
அதனால் என்ன ?
அவர்கள் ராஜ்ஜியத்திலிருந்து உதயமாகும் சூரியனை அவர்கள் நிறுத்தி விட்டார்கள், நீர் கிடைக்கும் வரை.
என்ன ? எப்படி அவர்கள் ? இந்த இருட்டில் நாம் எப்படி வாழ முடியும். எல்லா செடிகளும் மடிந்து விடும், நாம் பட்டினி கிடந்து சாக வேண்டியது தான்.
நான் அப்பொழுதே எச்சரித்தேன், இது நமக்கு பாதகமாக முடியும் என்று. ஆனால், நீங்கள், என்னை புறக்கணித்தீர்கள்.
சரி, சரி, இப்பொழுது நாம் என்ன செய்ய வேண்டும் சொல்.
நாம் நீரை அணையிலிருந்து விட்டால், அவர்கள், சூரியனை, விடுவார்கள்.


நீ உறுதியாக சொல்கிறாயா ? நாம் நீரை விட்டபின், அவர்கள் சூரியனை விடவில்லை என்றால் ?
அது சரி தான் மன்னா, அவர்கள் சூரியனை நிறுத்தினால், நாம் மீண்டும் நீரை நிறுத்தி விடுவோம்.
ஆமாம், நீ சொல்வது சரி தான். நீரை விட கட்டளை இடு.
போலோ, நாம் நீர் விட்டு விட்டோம், அவர்கள் சூரியனை விடவில்லையே.
அவர்கள் இராஜ்ஜியம் தூரத்தில் இருப்பதால் சூரியன் வர இன்னும் சில மணி நேரம் ஆகும்.
சில மணி நேரத்திற்குப்பிறகு, சூரியன் உதயமானது. அரசன் பெரு மூச்சு விட்டான்.
நன்றி ஆன்டவனே. அவர்கள் சூரியனை விடவில்லை என்றால், நாம் இருட்டில் வாழ்வதை நினைத்து கூட பார்க்க இயலவில்லை.
ஆமாம் மன்னா, என்னால் கூட இயலவில்லை
போலோ மணி அடிப்பவனிடம், பல மணிக்கு முன்பே மணி அடிக்க சொல்லியிருந்தான், அடுத்த மணிக்கு தன் சைகையை கண்டு ஒலிக்கச் சொல்லியிருந்தான். மன்னன் ஒரு முட்டாள் என அறிந்து கொண்டு மந்திரி அவனுடைய திட்டத்தைத் தந்திரமாக செயல் படுத்தினான். இவனுடைய திட்டத்தினால், இராஜ்ஜியம் பேரழிவிலிருந்து காப்பாற்றப்பட்டது.
முற்றும்

# கால் உரம்




கிரஹாம் என்ற வயதான ஒருவன் தன்னுடைய மூன்று பிள்ளைகளுடன் ஒரு கிராமத்தில் வாழ்ந்து வந்தான்.
ஒரு நாள்...
அப்பா, இந்த வருஷம், நம் விளைச்சல் நன்றாக இருந்தது.
ஆமாப்பா ...
மகன்களே, நான் என்றைக்கும் என்னையே நம்புகிறவன். எதுக்கும் யாரையும் சார்ந்து இருக்க மாட்டேன். இது தான் என் வாழ்க்கையின் தத்துவம்.
இருபது வருடங்களுக்கு முன் நான் ஒரு ஏழை விவசாயி, ஆனால் இன்று என்னிடம் நூறு ஏக்கர் நிலம் இருக்கிறது.


அப்பா, உங்கள் அறிவுரைப்படியே நாங்கள் நடப்போம்.
நான் சொன்ன சாதாரண தத்துவத்தை கடைபிடித்தால் உங்களில் யாரும் வாழ்க்கையில் தோற்க மாட்டீர்கள்.
சில மாதங்களுக்குப்பின், பெரியவர், உடல் நலமின்றி படுத்து விட்டார்.
அவர் மூன்று பேரையும் அழைத்தார்.
பிள்ளைகளே, உம்ம், என் வார்த்தைகளை நினைவில் வையுங்கள் ..உம்ம் . அதை கடைபிடியுங்கள் ..
சரி, அப்பா, நாங்கள் அப்படியே செய்வோம்.
ஒரு கடைசி ஆலோசனை..உம்ம்ம். எப்பொழுதும் உரத்தையே விளைச்சலுக்குகால் பயன்படுத்துங்கள்..


அவர்களுக்கு குழப்பமாக இருந்தது.
அப்பா, கால் உரம் என்றால் என்ன ?
கிரஹாம் கால் உரத்தை விளக்குவதற்கு முன், தன் கடைசி மூச்சை விட்டார்.
கிரஹாம் இறந்த பிறகு, மூன்று மகன்களும், அப்பன் சொத்தை சமமாக பிரித்துக்கொண்டனர்.
அப்பாவின் அறிவுறுத்தல் படி தம் வாழ்க்கையை வாழ்ந்தனர். ஆனால், ஒன்று மட்டும் அவர்களுக்கு விளங்க வில்லை - கால் உரத்தின் அர்த்தம்.


பெரிய பையன், தன் வேலையாட்களுடன் பேசினான்.
கால் உரம், என்னவாக இருக்கும், அப்பா உங்களுக்கு ஏதாவது சொன்னாரா ?
இல்லை ஐயா, எங்களுக்கும் விளங்க வில்லை.
முதல் மகன் உறவினர்களிடத்திலும், சினேகிதர்களிடத்திலும் விசாரிக்கின்றான்.
யாருக்கும் இதைப்பற்றி தெரியாது. அவர் கால் நடைகளின் கால்களை உரமாக உபயோகிக்க சொல்லியிருப்பாரா ?
மூத்தவன் வேலையாட்களை ஆட்டு கால்களையும், குதிரைக்கால்களையும் கொண்டுவரச்செய்தான்.
இந்த உரத்தை வயலில் போடுங்கள். இந்த வருஷம் எனக்கு நல்ல விளைச்சல் வேண்டும். நல்லபடி பார்த்துக்கொள்ளுங்கள்.
இரண்டாவது மகன் அமர்ந்து யோசித்தான்.
அப்பா எங்கள் கால்களை சுட்டிக்காட்டி "கால் உரம்" என சொன்னார். உரத்தை எங்கள் கால்களால் கலக்க சொன்னாரா?


ஒரு வேளை, நம் பலமும்,
காலுடைய மிதியும் உரத்திற்கு
பலத்தை கொடுக்கும்
என நம்பினாரா ?
அவன், ஆடு, மாடு, குதிரை
சாணியை கலந்து, காலால்
நன்றாக மிதித்தான்.
தன் வேலையாட்களிடம் சொன்னான் ...
இப்போ இதை நிலத்தில் பரப்பி
விடுங்கள். இந்த வருஷம் என்
அண்ணனைவிட, நல்ல விளைச்சல்
என் நிலத்தில் இருக்கும்.
மூன்றாவது மகன் எதையும்
கணக்குப் பார்த்துச் செய்பவன்.
அவன் விளைச்சல் பெற,
பல முறைகளின் மீது
பணம் செலவு
செய்வதை, நம்பவில்லை.


தம்பி, நீ குறைத்து செலவு செய்து, நிறைய விளைச்சல் பெறவேண்டும்.
அவன் அண்ணனின் அறிவுரையை ஏற்கவில்லை. வேலையாட் களுடன், தானும் நிலத்தில் வேலை செய்தான். அவன் வேலையை பங்கிட்டு மற்றவருக்கு கொடுப்பதை நம்பாமல், தானே அந்த வேலையைச்செய்தான்.
ஒரு வருடம் கழித்து, இரு சகோதரர்களும் தம்பியின் விளைச்சலைப்பார்த்து ஆச்சரியப்பட்டனர். அது அவர்கள் விளைவித்ததை விட இரண்டு மடங்கு அதிகமாக இருந்தது.
தம்பி வயலில் என்ன உபயோகித்தாய். விளைச்சல் பிரமாதமாக உள்ளதே ?
அப்பா சொன்னதை தவிர வேறு எதையும் நான் நிலத்தில் போட்டதில்லை.


கால் உரத்தையா சொல்கிறாய்?
ஆமாம்
ஒஹ், எங்கே கிடைத்தது அந்த கால் உரம் ?
அண்ணே கால் உரம் என்ற சொல் உங்களுக்கு விளங்க வில்லை.
இது கால் நடை கால்நடைகளின், இல்லை, காலால் கலந்த உரமும் இல்லை.


வேலையாட்களுக்கு வேலை கொடுக்காமல் நிலத்தில் இறங்கி தானே வேலை செய்வது தான் கால் உரம்.
நீ உன்னுடைய மக்களை கவனிப்பதைப் போல் பயிரை கவனித்தால், விளைச்சல் நன்றாக இருக்கும்.
தம்பி, நீ நமக்குள் இளையவன், நீ தான் அப்பாவுடைய சொல்லை சரியாக புரிந்து கொண்டாய்.
ஆமாம் தம்பி, இன்று முதல், மற்றவரை நம்பாமல், நம் வயலை நாமே கவனித்து பயிர் செய்வோம்.
முற்றும்.

# அதிர்ஷ்டம்




ஒரு காலத்தில், அரசன் புருனோஸ் காஜா இராஜ்ஜியத்தை ஆண்டு வந்தான். அவன் அறிவாளியாகவும், நெகிழ்ந்த மனமுள்ளவனாகவும் இருந்தான். அவன் நாடோடி மக்களுக்கு விலையுயர்ந்த பொருள்களை தானமாக கொடுத்து வந்தான்.
ஒரு நாள் கலிலியோ என்ற ஒரு பிச்சைக்காரன் அரசனின் அரண்மனைக்கு உதவி நாடி வந்தான்.
நான் இந்த கோட்டையின் தலையாய நுழை வாசலில் மன்னனை சந்திக்க நிற்கிறேன். நான் உயிர் வாழவும் என் குடும்பத்தை காக்கவும் எனக்கு பணம் தேவை.
கலிலியோ அதிக நேரம் காத்திருந்தும் மன்னனை பார்க்க முடியவில்லை. அரசன் அவனை பார்க்க முடிந்தும், வேண்டும் என்றே அவனை சந்திக்கவில்லை.
ஒவ்வொரு காலையிலும் விலை உயர்ந்த பொருள்களை எல்லோருக்கும் தானம் செய்கிறார் அரசர், ஆனால் என்னை புறக்கணிக்கிறார். இவர் உதவி பெறும் வரை நான் இங்கிருந்து நகரப்போவதில்லை.


ஒரு நாள் அரசன் விடுமுறையில் வெளியே போகிறான்.
ஓஹ், இன்று அரசன் தன் குடும்பத்துடன் வேட்டைக்கு போய் இருக்கிறான். நல்லது, நான் அவனுடைய படைக்கு பின்னால் போகவேண்டும். அவனை பார்க்க அங்கே எனக்கு வாய்ப்பு கிட்டலாம், யாருக்கு தெரியும்.
அரசன் நிறைய மிருகங்களை வேட்டைய ாடியதால், மகிழ்ச்சியாக இருக்கிறான் நான் அவனை சந்திக்க இன்று முயல வேண்டும்.
ஒரு சிங்கத்தை வேட்டையாடும் பொழுது, திடீர் என அரசனுக்கு அடிபட்டு பலத்த காயம் உண்டாகிறது.
கலிலியோ இந்த நிகழ்ச்சியை பார்த்து...
ஆண்டவனே, இந்த சிங்கம் எங்கள் அரசனை கொல்ல முயற்சிக்கிறது. நான் அவனை காப்பாற்ற வேண்டும்.
கலிலியோ தன் கோடாரியை எடுத்து சிங்கத்தை கொன்றான். மன்னனும், அவனுடைய படைகளும், அதிர்ச்சி அடைந்து, பிரமிப்புடன் கலிலியோவை பார்க்கின்றனர்.
சூரியன் அஸ்தமனமாகும் பொழுது, அரசன் தன் படையுடன் தன் ராஜ்ஜியத்திற்கு செல்கிறான், கலிலியோ அரசனின் உதவியை எதிர்பார்த்து வாசலில் காத்துக்கொண்டிருந்தான்.
அரசன் கலிலியோவுக்கு நன்றி கூறி சென்றுவிட்டான்.


ராஜ்ஜியத்தில்...
அடுத்த நாட்டிலிருந்து எனக்கு போர் எச்சரிக்கை வந்துள்ளது. மந்திரியாரே, நம் படையை போருக்கு தயார் செய்யுங்கள்
அரசன் படையுடன் போருக்கு போகிறான். நானும் அவனை பின் தொடர்ந்து செல்ல வேண்டும். என்னுடைய ஆதரவு தேவைப்படலாம்.
போரின் போது, அரசனின் படைகள் பிரிந்து போகின்றன. இதை கலிலியோ கவனிக்கின்றான். அரசனை தாக்கும் விரோதிகளை கொல்ல அவன் தன் கோடாரியை தயாராக வைத்திருக்கிறான். கடைசியில் அரசன் கலிலியோவின் உதவியால் போரை வென்றான். அரசன் அவன் உதவிக்கு கலிலியோவை பாராட்டுகிறான்.
போருக்கு பிறகும் கலிலியோ நுழை வாசலில் அரசனுடைய உதவிக்கு காத்துக்கொண்டிருக்கிறான்.


ஒவ்வொரு காலையிலும் எல்லோருக்கும் தானம் தரும் அரசன், ஏன் இப்படி கலிலியோவை புறக்கணி க்கின்றான்? நான் அவனையே கேட்கலாம் என நினைக்கின்றேன்.
மன்னா, தேவைப்படுவோர்க்கு நீ உதவி செய்கிறாய், ஆனால், சில நாட்களாக உன் உதவி கலிலியோவுக்கு போய் சேருவதில்லை, காரணத்தை நான் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.
அன்பான மந்திரியே. இந்த ஆளை நான் பல நாட்களாக பார்க்கின்றேன். நான் அவனுக்கு உதவ நினைக்கின்றேன், ஆனால் எப்படியோ நான் திரும்பி விடுகிறேன். என் உள்மனம் அவனுக்கு உதவ மறுக்கிறது. நேரம் இன்னும் வரவில்லை என நான் நினைக்கிறேன்.
அவனுக்கு தானம் அளித்து என்ன ஆகிறது என பார்க்கலாம்.
சரி, பார்ப்போம், கலிலியோவை கூப்பிடுங்கள்.



மந்திரியாரே, ஒரு பழத்தை, வைரங்கள் நுழைத்து கொண்டு வாருங்கள்.
கலிலியோ நான் உனக்கு பரிசு அளிக்கப் போகிறேன். இந்த பழத்தை பெற்றுக்கொள்.
பழமா? நான் வேறு எதையோ எதிர் பார்த்தேன். ஒஹ், ஹோ, ஆனால் சரி, இந்த பழத்தை பெற்றுக்கொண்டு, சிறிது நேரம் காத்திருக்கலாம்.
வைரங்கள் புகுத்தப்பட்டது கலிலியோவுக்கு தெரியாது, அவன் அதை ஒரு சாதுவுக்கு கொடுத்து விடுகிறான்.
அரசனிடமிருந்து எனக்கு வேறு எதுவும் கிடைக்கவில்லை. குறைந்தது ஆசீர்வாதமாவது இந்த சாதுவிடமிருந்து கிடைக்கட்டும். இந்த பழத்தை இவனுக்கு கொடுத்து விடுகிறேன்.
சிறிது நேரம் கழித்து, அரசன் அந்த சாதுவை அழைக்கின்றான். சாது, அரசனை வாழ்த்தி, அதே பழத்தை, அரசனுக்கு கொடுக்கிறான்.


மந்திரி, எல்லாம் வாழ்வில் அதிர்ஷ்டத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. கலிலியோ தன் அதிர்ஷ்டத்தை காண முடியாததை கவனித்தீர்களா ?
ஆமாம், மன்னா, ஆனால்; இன்னொரு முறை அவனுடைய அதிர்ஷ்டத்தை சோதிக்கலாமென நினைக்கிறேன். வேறு என்றைக்காவது சோதிக்கலாம்.
சரி, அவன் அதிர்ஷ்டத்தை இன்னொரு நாள் சோதிக்கலாம்.
சிறிது நேரம் கழித்து, மந்திரி, கலிலியோவை கோட்டைக்குள் அழைத்தார்.
அன்புள்ள கலிலியோ, இந்த பழத்தை எடுத்துக்கொள், என் சார்பாக
ஓஹ் ஆண்டவனே, மீண்டும் பழமா? அரசன் ஏன் பழங்களையே தானம் செய்கிறான் என்று எனக்கு புரியவில்லை. இது சரி, எடுத்துக்கொண்டு, நடையை கட்டுவோம்.
பெண்ணே, நான் இந்த பழத்தை விற்க விரும்புகிறேன், வேண்டுமா?
ஓஹ் ஆமாம், இந்தா பணம், இது நறுமணத்துடன் இருக்கிறது. நான் இதை அரசனுக்கு கொடுக்க வேண்டும்.
மன்னா,மீண்டும் கலிலியோ வைரங்களை கவனிக்க தவறி விட்டான். நீங்கள் சொல்வது சரி, அவன் நேரம் இன்னும் வரவில்லை.


ஒரு நாள் காலை, கலிலியோவுக்கு வைரங்களை கொடுக்க அரசன் நினைத்தான்.
மந்திரி, கெலிலியோவை அழையுங்கள்
சரி மன்னா, எனக்கு ஓர் தயவு செய்யுங்கள். முன்பு மாதிரியே, ஒரு பழத்தை கலிலியோவுக்கு கொடுங்கள். அவன் அதிர்ஷ்டத்தை சோதிக்கலாம்.
சரி மந்திரியாரே, நீங்கள் விரும்பியதைப்போல். ஆனால், இன்று அவனுடைய அதிர்ஷ்டம் அவன் கதவை தட்டப்போகுது என நான் நினைக்கிறேன்.
கலிலியோ, இந்த பழத்தை எடுத்துக்கொள்..
ஒஹ் ஆண்டவனே, மீண்டும் ஆப்பிள்! நான் பல நாட்களாக ஒன்றும் சாப்பிடவில்லை, நான் நடுங்கிக்கொண்டே இருக்கிறேன். ஒஹ் ஆன்டவனே, தயவு செய்து உதவு.
அரசனிடம் விலை உயர்ந்த பொருளை எதிர் பார்க்காமல், பழத்தை எடுத்துக்கொண்டு போய் விட வேண்டியது தான்.
கலிலியோ நடுங்கிக்கொண்டு இருந்ததால் ஆப்பிள் கையிலிருந்து நழுவி கீழே விழ, வைரங்கள் சிதறின.


ஓஹ் என் நல்ல காலம்!
வைரங்கள். அதாவது, அரசன்
இத்தனை நாட்களும் விலை உயர்ந்த
பொருளை தானம் செய்து கொண்டி
ருந்தான், அதை நான் அடையாளம்,
கண்டுகொள்ள இயலவில்லை.
நான் ஒரு முட்டாள்.
கலிலியோ எல்லா வைரங்களையும் பொறுக்கிக்கொண்டு அரசனுக்கு
அவன் கருணைக்கு நன்றி கூறினான். அதே நேரத்தில், மந்திரி, வாழ்க்கையில்
அதிர்ஷ்டத்தின் மதிப்பும் செல்வத்தின் அவசியமும் உணர்ந்தான்.
முற்றும்.

# வேலையின் பலன்




போக்வதி அரசன் சந்திரபானூ எப்பொழுதும் மக்கள் நலனில் கவலைக்கொண்டிருப்பான்.
சாதாரண குடிமகனைப்போல் வேடம் அணிந்து, சந்திரபானூவும் அவன் மந்திரி ஷந்த்ஷிலும் மக்கள் நலனறிய ஊருக்குள் வலம் வருவர்.
பாதி இரவாகியும் அந்த வீட்டில் விளக்கு எரிந்து கொண்டிருக்கிறது.
மன்னா, நாம் விசாரிக்க வேண்டும் என நினைக்கிறேன்.
எனக்கு உடுத்திக்கொள்ள ஓர் நல்ல சேலையும் இல்லை, உற்றார் முன் செல்ல எனக்கு வெட்கமாக உள்ளது.
நான் கூட அரிசி புட்டு சாப்பிட்டு ரொம்ப நாள் ஆகி விட்டது.


இவ்வளவு கஷ்டப்பட்டு உழைத்தும், நம்மால் நம் தேவைகளை பூர்த்தி செய்ய முடியவில்லை.
நாம் மட்டுமல்ல, மற்ற குடும்பங்கள் கூட இதே மாதிரி தான் கஷ்டப்படுகிறார்கள்.
நாம் என்ன செய்வது?
நாம் ஒன்றும் செய்ய முடியாது ... நம் ராஜா, நம் துன்பங்களை நினைத்து பார்க்கிற வரைக்கும், நாம் இப்படித்தான் வாழ வேண்டியதிருக்கும். நேரமாகி விட்டது, தூங்கலாம் வா..
அடுத்த நாள்...
நாளை... அவனை சபைக்கு அழையுங்கள்.


உன் பெயர் என்ன?
என் பெயர் ராகவ், நான் என்ன தவறு செய்தேன் அரசே!
உன் மனைவிக்கு நல்ல சேலை இல்லை, நீ ரொம்ப நாட்களாக அரிசிப் புட்டு உண்ணவில்லை, இதுதான் நீ செய்த தவறு...
இந்தத் துணிகளையும் தங்கக் காசுகளையும் பெற்றுக்கொள், இவை உனக்குப் போதும் என்று நினைக்கிறேன்...
அரசே, நீங்கள் எங்கள் கடவுள், நீங்கள் மக்கள் மனம் அறிந்த அரசர். நன்றி அரசே நன்றி!


சில நாட்கள் கழித்து..
ஷாந்த்ஷில், நாம் போய் ராகவ் எப்படி இருக்கிறான் என்று கவனிப்போம்,
சரி, மன்னா..
அரசனும், மந்திரியும் மாறு வேடத்தில், தெருக்களில் அலைகின்றனர்.
ஒஹ்ற, அங்கே விளக்குகள் எரிகின்றன.
அவர்கள் பேச்சை கேட்போம்.


அரசன் ஒரே ஒரு சேலை கொடுத்தான், அது வெளுத்து சாயம் போய் கிழிந்து விட்டது. கொடுத்த பணமும் சில நாட்களில் தீர்ந்து விட்டது. நாம் பழைய நிலைமைக்கே வந்து விட்டோம்.
அந்த ஆள், நன்றி கெட்டவன், அவன் தண்டிக்கப்பட வேண்டியவன்.
தயவு செய்து, அவசரப்பட்டு எதையும் செய்யாதீர்கள், மன்னா! நாம் உண்மை என்ன என்பதை கண்டுபிடிப்போம்.
KNOCK!
KNOCK!
KNOCK!


யார் நீங்கள், என்ன வேண்டும்?
நாங்கள் பயணிகள். உங்கள் பேச்சை கேட்டோம், ஆகவே கதவை தட்டினோம்.
உனக்கு துணிகளும், பணமும் அரசன் கொடுக்கும் பொழுது, அந்த சபையில் நானும் இருந்தேன். அன்று அரசரை ரொம்ப பாராட்டினாய். ஆனால் இன்று, அவரை அவமதிக்கிறாய், ஏன் ?
அன்று அரசன் எனக்கு, துணியும் பணமும் கொடுத்து உதவினார். ஆகவே நான் நன்றி சொல்லி, நிறைய புகழ்ந்தேன். அனால், என் மனைவியின் சேலை, வெளுத்து கிழிந்து விட்டது. செலவுக்கு கொடுத்த பணமும் முடிந்து விட்டது.


அரசன் தினமும், உங்களுக்கு உணவும், துணியும் கொடுக்க கடமைப்பட்டவன் என நினைக்கிறீர்களா?
இல்லை, அதை நான் எதிர் பார்க்கவில்லை. அரசனின் பரிசுகள் தற்காலிகமாக பிரச்சனை களை தீர்த்து வைத்தது. அதற்கு பதிலாக, நாங்கள் செய்யும் வேலைக்கு தக்க பலன் கிடைத்திருந்தால், எங்கள் நிலைமை வேறு மாதிரியாக இருந்திருக்கும்.
நீ சொல்வதற்கு என்ன அர்த்தம்?
தின சம்பளம் தான் எங்களுக்கு வாழ்வாதாரம். நிலக்கிழார் களும், அரசாங்க அதிகாரிகளும், எங்களுக்கு சொற்ப சம்பளத்தையே அளித்து வருகின்றனர். எங்கள் உழைப்பால் அவர்கள் பணம் சம்பாதித்து, எங்களை, இந்த நிலைமைக்கு ஆளாக்கி விட்டார்கள்.


அரசன் சந்திரபானூ ராஜ்ஜியத்திலுள்ள நிலைமையை புரிந்து கொண்டார்.
ஷாந்த்ஷில், இவர்களை சுரண்டுபவர்களை அடையாளம் கண்டு, தக்க நடவடிக்கை எடுங்கள்.
நிச்சயமாக, மன்னா,
ஷாந்த்ஷில் அரச கட்டளைப்படி, இராஜ்ஜியத்தில் அனைவரும் வேலையின் பலனை அடைய ஆவன செய்கிறார்.
அதன் பிறகு, மக்கள் கவலையின்றி சந்தோஷமாக வாழ்ந்து வந்தனர்.
முடிவு




**Buy Books & eBooks Online at www.indianvedicschool.com**

**INDIAN VEDIC SCHOOL PVT LTD.**

Plot No: 29B, Laxmi Nilayam, Road No: 8, Film Nagar,
Jubilee Hills, Hyderabad - 500096, Telangana, India.


info@indianvedicschool.com www.indianvedicschool.com
+91 7337200273